**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC/389/2023 |
| Prosecution Witness | : | **அ.சா.1** |
| Name | : | **பிரதாப்** |
| Father’s / Husband Name | : | ராமச்சந்திரன் |
| Address | : | சத்திரமுனை |
| Age | : | 24 /2024 |

**தேதி : 19.11.2024**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் கிராபிக் டிசைனிங் கோர்ஸ் படித்துக்கொண்டிருக்கிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 03/09/2022 அன்று சதீஸ் வீட்டின் அருகே இருந்தபோது பெரம்பலூர் போலீசார் சதீஸின் வண்டி காணாமல் போனது சம்மந்தமாக விசாரித்து வரைபடம் வரைந்து அருகிலுள்ள வீடுகளை குறிப்பிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதற்காக நானும், சரண்குமார் என்பவரும் சாட்சி கையெழுத்துப் போட்டோம். பார்வை மகஜர் அ.சா.ஆ. 1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி சதிஸ்-ம் நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் தான் என்றாலும், பழக்கம் என்றாலும் சரிதான். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று என்னால் சொல்லமுடியும். குற்ற எண் என்ன என்று

தெரியுமா என்றால் ஞாபகமில்லை. சம்பவ இடத்திற்கு வடக்கில் செல்லமுத்து வீடு உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திலுள்ள EB கம்பத்தில் எண் உள்ளது என்றாலும் நான் சம்பவ இடத்தில் கையெழுத்து போடாமல் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டதால் தான் EB கம்ப எண் தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் கையெழுத்து போடவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.